00026

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் **2019/2020**

**EPC 1234 / ESC 1134** – மொழித்திறன்களின் விருத்தி

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் விரும்பிய மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : **17/06/2023** நேரம்: மு.ப. 09.30 – மு.ப. 11.30

## பகுதி I

1. முன்பள்ளி பிள்ளைகளின் சுயாதீன உரையாடல் திறன்களை விருத்தி செய்வதற்கான மூன்று (03) வழிகளை எழுதுக.
2. முன் - வாசிப்பு எனம் பதத்தினால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விளக்குக.
3. வகுப்பறையில் கேட்டல் பிரச்சினையுடைய பிள்ளைகளின் பண்புகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.
4. முன்பள்ளி பிள்ளைகளின் மொழிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வீட்டுச் சூழல் தொடர்பான மூன்று (03) காரணிகளை குறிப்பிடுக.
5. பிள்ளைகளின் மொழிவிருத்தியை ஊக்குவிப்பதில் முன்பள்ளி சூழலின் அனுகூலங்கள் மூன்றினை (03) எழுதுக.
6. முன்பள்ளி பிள்ளைகள் தாளங்களை கற்றுக் கொள்வதன் நன்மைகளை சுருக்கமாக விளக்குக.
7. முன்பள்ளி பிள்ளைகளின் கேட்டல் திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் மூன்றினை (03) எழுதுக.
8. பிள்ளைகளிடத்தில் உள இயக்க திறன்களை விருத்தி செய்வதற்குரிய செயற்பாடுகள் ஐந்தினை (05) எழுதுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. பிள்ளைகளின் கவனத்துடன் கேட்டல் தன்மையை மேம்படுத்துவதற்கு முன்பள்ளியில் பயன்படுத்தப்படும் கற்றல் - கற்பித்தல் துணைச்சாதனங்கள் நான்கினைப் (04) பெயரிடுக.

(08 புள்ளிகள்)

ii. நீங்கள் மேற்குறிப்பிட்ட கற்றல் - கற்பித்தல் துணைச்சாதனங்களில் மூன்றினை (03) தெரிவு செய்து விளக்கப்படங்களை பயன்படுத்தி கேட்டல் திறன்களை வளர்ப்பதற்கு படிப்படியாக பிள்ளைகளிடம் இவற்றை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதனை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

10.

i. பிள்ளைகளிடத்தே இனங்காணக்கூடிய பேச்சுக்குறைபாடு இரண்டினை (02) சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. பேச்சுக் குறைபாடு உடைய பிள்ளைகளிற்கு உதவ வகுப்பறையில் நீங்கள் ஏற்பாடு செய்யக்கூடிய இரண்டு (02) செயற்பாடுகளை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

11.

i. முன்பள்ளி வகுப்பறையில் பிள்ளைகள் புத்தகம் வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. முன்பள்ளி பிள்ளைகளின் மொழித்திறன்களை வளர்ப்பதற்கு புத்தகங்களை எவ்வாறு பயன்படுத்தி செயற்பாடுகளை ஒழுங்கமைப்பீர் என்பதனை மூன்று (03) விளக்கப்படங்களின் உதவியுடன் விபரிக்குக.

(15 புள்ளிகள்)

12.

i. சுதந்திரமாக எழுதும் திறனைப் பெற்றுக் கொண்ட பிள்ளை நன்றாக எழுதக் கற்றுக் கொள்கிறது. இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீரா? உமது விடைக்கான காரணத்தை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி பிள்ளைகளின் எழுதும் திறனை வளர்ப்பதற்குஇரண்டு (02) செயற்பாடுகளை எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. மொழித்திறன்கள் நான்கினைப் (04) பெயரிடுக.

(04 புள்ளிகள்)

ii. கதைகளின் மூலம் எவ்வாறு திறன்களை விருத்தி செய்ய முடியும் என்பதனை விளக்குக.

(16 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*